1982 மார்ச் 9]

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) கதர் ரகங்களில் பாலியெஸ்டர் நூல் கலந்து நெசவு செய்வது நிறுத்தி வைக்கப்படவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

கால்நடை பராமரிப்பு கிளை நிலையங்களுக்கு வழங்கப்படும் மருந்துகள்.

*வினா எண். 440—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இயங்கிவரும் கால்நடை பராமரிப்பு கிளை நிலையங்களுக்கு ஆண்டுக்கு அளிக்கப்படும் மருந்தின் மதிப்பு எவ்வளவு?

(ஆ) அத் தொகையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) தமிழகத்தில் மொத்தம் 2,301 கால்நடைப் பராமரிப்பு கிளை நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு கிளை நிலையத்திற்கும் ஆண்டு தோறும் 1,500 ரூபாய் வரை மருந்துகள் வாங்கி உபயோகிக்க அனுமதி வழங்கப்படுகிறது. 1980-81ம் ஆண்டில் இக்கிளை நிலையங்களுக்குத் தேவையான மருந்துகள் வாங்குவதற்கு 23,24,935 ரூபாய் மொத்தம் ஆகியிருக்கிறது.

(ஆ) ஒவ்வொரு கிளை நிலையத்திற்கும் ஆண்டு தோறும் மருந்துகள் வாங்க நிர்ணயிக்கப்பட்டுள்ள 1,500 ரூபாய் நிதி வரம்பை உயர்த்த வேண்டிய நிலைமை தற்போது ஏற்படவில்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய கால்நடை கிளை மருத்துவமனைகளிலே. கால் நடைகளுக்கு சித்த வைத்திய முறை அளிக்கப்படுகிறதா? உயிர் காத்தல் மருந்தைத் தவிர, மற்ற எல்லா மருந்துகளும் சித்த வைத்திய முறையில் அதாவது சுக்கு, காசிக் கட்டி போன்ற சித்த வைத்திய மூலப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. எனவே, தமிழகத்திலே எல்லா கால்நடை மருத்துவமனைகளிலும் சித்த வைத்திய மருத்துவ முறையை அளிப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

[1982 மார்ச் 9

[முற்பகல் 10.10]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை கிளை நிலையங்களில் வேண்டிய மருந்துகள் தேவையான அளவிற்கு தயாரிக்கப்பட்டு கொடுக்கப்படுகிறது. இந்த மருந்து தேவையில்லையென்றால், நாம் சித்த வைத்திய முறையை கையாள வேண்டும். சித்த வைத்திய முறையை கையாண்டு கால்நடைகளுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க முடியும் என்று உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னாலும், தேவையான மருந்து கிடைக்கும்போது சித்த வைத்திய முறை தேவையில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

தென்காசி தாலுகா திருமாலாபுரத்தைச் சேர்ந்த அரிஜனர் ஒருவர் இறந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ஏ. சாகுல் அமீது, ரா. கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், எல். இளையபெருமாள், திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், திருவாளர்கள் ஜி. மூர்த்தி, கே. பாரமலை, கே. எம். தங்கமணி, அ. ரகுமான்கான், ஜே. எஸ். இராசு, என். எஸ். வி. சித்தன், ஆகியோர்,

"தென்காசி தாலுகா பன்மொழி கிராமம் மீனாட்சிபுரம் அருகிலுள்ள திருமாலாபுரத்தில் அரிசன வகுப்பைச் சார்ந்த சகோதரர் திரு. காளிமுத்து அவர்கள் காவல் துறையினரால் 1982-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 16 ஆம் நாள் அன்று காவல் நிலையத்தில் அடித்துக் கொல்லப்பட்டதாக நடந்துகொண்டிருக்கும் போராட்டத்தால் ஏற்பட்டுள்ள கவலை குறித்து" விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர்.

இது எப்படி அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு. ஏ. சாகுல் அமீது அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.